**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 175/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா.1** |
| Name | : | **திரு. தங்கதுரை** |
| Father's Name/Husband Name: | | **திரு. கணேசன்** |
| Village | : | அயினார்பாளையம் |
| Taluk | : | **வேப்பந்தட்டை** |
| Age | : | 42/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் 2, 4 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். சம்பவத்திற்கு முன்பாக எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே வாய் தகராறு இருந்து வந்தது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 5 மணியளவில் எங்கள் வீட்டருகே நான் காட்டிற்கு சென்றுவிட்டு வந்த பிறகு என் மனைவி பரமேஸ்வரியிடம் எதிரிகள் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். சம்பவத்தில் என் மனைவியை யாரும் தகாத வார்த்தைகளால் பேசவில்லை. எதிரிகள் யாரும் என்னை தாக்கவில்லை. எதிரிகள் யாரும் என்னை கழுத்தை நெறித்து கொலை மிரட்டல் விடுவில்லை. எதிரிகள் யாரும் என்னை விளக்கமாற்றாலும், கையாலும் அடிக்கவில்லை. என் அப்பா கணேசனை எதிரிகள் யாரும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை. எதிரிகள் யாரும் எனது மனைவியின் முடியை பிடித்து இழுத்து , சேலையை பிடித்து இழுத்து மானபங்க

படுத்தவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் என்னை விசாரித்த போது தற்போது கூறியுள்ளதை தான் கூறினேன்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது நான், எனது அப்பா கணேசன், எனது மனைவி பரமேஸ்வரி ஆகியோர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டோம். சமாதானம் மனுவில் நான் மட்டும் கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். போலிசார் என்னை விசாரித்தபோது, கடந்த 16.01.2022 அன்று மாலை 5 மணியளவில் எங்களின் வீட்டு முன்பாக எதிரிகள் அனைவரும் என் மனைவியை தகாத வார்த்தைகளால் பேசி, அது குறித்து கேட்ட என்னை எதிரி ராமச்சந்திரன் மகன் சரவணன் தகாத வார்த்தைகளால் பேசி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் தலையில் ஓங்கி அடித்தார் என்றும், அருகிலிருந்த எதிரி ராமச்சந்திரன் என் தொண்டையை பிடித்து நெறித்து, கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், எதிரிகள் ராணி மற்றும் பிரேமா ஆகியோர் என்னை விளக்கமாற்றாலும், கையாலும் அடித்தார்கள் என்றும், தடுக்க வந்த என் அப்பா கணேசனை எதிரி சரவணன் தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், எதிரி ராமச்சந்திரன் எனது மனைவியின் தலை முடியை பிடித்து இழுத்து சேலையை பிடித்து இழுத்து மானபங்க படுத்தினார் என்றும், எதிரிகள் ராமச்சந்திரன் மற்றும் சரவணன் ஆகியோர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், அதனால் நான் எதிரிகள் மீது புகார் மனு அளித்தேன் என்றும், அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றும், தற்போது எதிரிகள் நாங்களும் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகளால் எனக்கோ, எனது மனைவிக்கோ, எனது அப்பாவிற்கோ எந்த இடத்திலும் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.